www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகள்

## LIBERATION TIGERS OF THAMIL EALAM

சிறீலங்கா இராணுவ வீரனுக்கு,

ஒரு தமிழீழ விடுதலைப் புலியிடமிருந்து...

தமிழீழ மண்ணில் இன்று கொழுந்துவிட்டெரியும் விடுதலை எழுச்சியை நீ அறிவாய். எமது மண்ணின் விடுதலையை நாம் வென்றெடுப்பது தவிர்க்க முடியாத ஒரு வரலாற்று நியதி. சிங்களப் பெருந்தேசியவாத அரசு பயங்கரவாதத்தின் கருவியாக, தமிழீழ விடுதலைப் போராளிகளைத் தேடியலைகின்ற நரவேட்டையின் கருவியாக, நீ செயற்படுகின்றாய்.

தமிழீழத்தின் வீதிகளில் நீ காக்கியணிந்து, ஆயுதமேந்தி, வாகனங்களில் வலம் வருவதை நாம் பார்க்கிறோம். ஒரு வயதான தாயையோ, தந்தையையோ அல்லது சகோதரியையோ பராமரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தின் பேரில், கூலிக்காக நீ ஆயுதமேந்துகின்றாய், சிறீலங்காவின் ஆட்சிப்பீடத்தில் இருக்கும் சுயநலக் கும்பலின் வளத்துக்கு மேலும் உரம் போட நீ பலியாகின்றாய். இதே ஆளும் வர்க்கம் வெகு விரைவில் உன்னை, உனது சுற்றத்தாருக்கும், வர்க்கத்தினருக்கும் எதிராகத் திருப்பும், அவர்களின் எழுச்சியை நசுக்கவும் நீயே ஆட்சிப்பீடத்தின் கருவியாகப் பயன்படுவாய்.

தேச விடுதலைக்கான வேட்கையில் இயங்கும் நாங்கள், ஆளும் வர்க்கத்தின் கைப்பாவையான உன்னை எதிர்க்க நிர்ப்பந்திக்கப்படுகிறோம். போர்முனைச் சந்திப்பில் நீ பலிக்கடாவாகின்றாய். விடுதலைப் போர்ப் பாதையில் எமது சாவு மகத்தானது, அர்த்தமுள்ளது, கூலிக்காக மாரடிக்கும் உனது சாவோ அற்பமானது.

அரசு பயங்கரவாதத்தின் பகடைக்காயான நீ, தமிழீழ மண்ணில் புரிந்த கொலைகளும் நாசவேலைகளும் தமிழ் மக்கள் மனதில், அழியாது உறைந்துபோய்க் கிடக்கின்றன. ஆளும் வர்க்கத்தின் கறை படிந்த கைங்கரியங்களை நீ செய்து மடியாதே. அவர்களின் சுபீட்சத்துக்காக உனது தார்மீகத்தையும், மனிதத்துவத்தையும் இழக்காதே. ஒடுக்கப்பட்ட சிங்கள விவசாயத் தொழிலாளிகளின் பக்கத்தில் நீ சேர்ந்து, ஆளும் வர்க்கத்துக்கு எதிராகப் போராடும் வேளையில் தான் நீயும் நாமும் நேசமொழியில் பேசிக்கொள்ள முடியும். அப்படி நீ போராடுவாயானால் அப்பொழுதுதான் எமது போராட்டத்தின் இதயத் துடிப்பை நீ புரிந்து கொள்வாய்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வெளியீடு:- பிரச்சார வெளியீட்டு வாரியம், தமிழீழ விடுதலைப் புலிகள்.